<u>முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

அசல் வழக்கு எண். 932/2015 இ.ம.எண்.
எம்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

வா.சா. 1 – நவீனா

<u>14 மற்றும் 16 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:

எனது அப்பா பெயர் சிவசண்முகம் என்றும், அவரை சண்முகம் என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். என் அப்பா இந்த வழக்கில் இரண்டாம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் எந்தெந்த பள்ளியில் படித்தேன் என்றால் நான் பெருந்துறை கொங்கு வேளாளர் பள்ளியிலும், திருச்செங்கோட்டில் உள்ள SKV மெட்ரிக்குலேசன் பள்ளியிலும் படித்தேன். பள்ளி ஆவணங்களில் காப்பாளர் என்ற இடத்தில் என் அப்பா பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, என் அம்மா பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. பள்ளி ஆவணங்களில் காப்பாளராக அம்மாவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை காட்டுவதற்கு என்னால் ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். எனக்கு என் தாயார் தான் காப்பாளராக இருக்க வேண்டும் என்று என் அப்பா காப்பாளராக இருக்கக் கூடாது என்று GWOP மனு தாக்கல் செய்து உத்தரவு ஏதேனும் பெறப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு மனு எதுவும் தாக்கல் செய்து உத்தரவு பெறப்படவில்லை. குடும்ப அட்டை, என்னுடைய ஆதார் கார்டு ஆகியவை எனது தகப்பனார் முகவரியில் தான் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்களது குடும்ப அட்டையிலும், ஆதார் கார்டிலும் எந்த முகவரி காட்டப்பட்டுள்ளது என்றால் எனது திருமணத்திற்கு முன்பாக அம்மாவின் முகவரி காட்டப்பட்டுள்ளது. அம்மாவின் முகவரி எது என்றால் 105, தாஸ்கண்ட் வீதி, கொங்கு நகர், பெருந்துறை ஆகும். மேற்படி முகவரியில் அம்மாவுடன் குடியிருந்து வந்தேன் என்பதை காட்டுவதற்கு குடும்ப அட்டை, ஆதார் கார்டு தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும்.

இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதாவது கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை, வாய்மொழியாக பாகம் கேட்டேன். 1 முதல் 4 பிரதிவாதிகளான என் அப்பா, சித்தப்பா, மற்றும் தாத்தாவிடம் இருந்து கிரையம் வாங்கியவர்களின் கிரைய பத்திரங்களை செல்லாது என்று அறிவிக்க

பரிகாரம் எதுவும் கோரப்படவில்லை என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளிடம் வாங்கிய கிரையம் செல்லாது என்று கிரையம் வாங்கியவர்களுக்கு நோட்டீஸ் எதுவும் அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். 13 முதல் 16 பிரதிவாதிகளுக்கு 1 முதல் 4 பிரதிவாதிகளால் எழுதிக் கொடுக்கப்பட்ட கிரைய ஆவணம் தான் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 10 என்றால் சரிதான். வா.சா.ஆ. 10 கிரைய ஆவணத்தை பற்றிய விவரம் எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ. 10 கிரைய ஆவணத்தில் நகல் வாங்கி படித்துப் பார்த்து, அதன் பேரில் மேற்படி ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ. 10 கிரைய ஆவணத்தில் என் அப்பா சிவசண்முகம் என்பவர் தனக்காகவும், தனது மைனர் மகளுக்காகவும் கிரையம் கொடுப்பதாக வாசகம் காட்டி மேற்படி கிரைய ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால், என் அப்பா எனக்காக எதுவும் செய்யவில்லை. மேற்படி கிரைய ஆவணத்தின் படி அதே தேதியில் ரூ.86,100/- தொகை கைமாறியதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 10 ஆவணமானது 267/2ம் நெம்பர் காலையில் உள்ள 35 செண்ட் சொத்தை பொறுத்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 35 செண்ட் சொத்துக்கான நான்கு புற செக்குபந்தி தெரியுமா என்றால் மேற்படி செண்டின் நான்கு புறமும் விவசாய பூமி தான் உள்ளது, அது யார் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான்குபுற சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. வழக்குரையில் மேற்படி சொத்திற்கான செக்குபந்தி எதன் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி சொத்திற்கு நேரில் சென்று அருகில் உள்ளவர்களை விசாரித்து அதன் அடிப்படையில் நான்குபுற செக்குபந்தி குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா 1 வது அயிட்ட சொத்தானது 5.44 1/2 ஏக்கர் என்றால் சரிதான். அதில் என் அப்பா, தாத்தா, சித்தப்பா ஆகியோர்கள் சேர்ந்து 1.45 ஏக்கர் விற்பனை செய்தார்கள் என்றால் சரியல்ல, அதைவிட கூடுதலாக விஸ்தீரணங்களுடன் சுமார் இரண்டரை ஏக்கர் பூமியை விற்பனை செய்தார்கள். 1 ஏக்கர் 45 செண்ட் விஸ்தீரணமுள்ள பூமியை மட்டும் தான் விற்பனை செய்துள்ளார், மீதமுள்ள 4 ஏக்கர் பூமியானது என் அப்பா, சித்தப்பா ஆகியோர்களின் சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனக்கு 12ல் ஒரு பங்கு பாகமான 45 செண்ட் கிடைக்கக்கூடும் என்றாலும், என் அப்பா, சித்தப்பா, தாத்தா ஆகியோர் விற்பனை செய்தது போக மீதமுள்ள 4 ஏக்கர் பூமியில் தான் 12 ல் ஒரு பாகம் கோரமுடியும் என்றாலும் சரியல்ல.

13 முதல் 16 பிரதிவாதிகள் வா.சா.ஆ. 10 ஆவணப்படி கிரையம் பெற்ற 35 செண்ட் சொத்தில் என்ன பயிர் செய்துள்ளார்கள் என்றால் மழை பெய்து, வாய்க்கால் தண்ணீர் வந்தால் மட்டும் தான் அந்த பூமியில் விவசாயம் செய்ய முடியும். வா.சா.ஆ. 10 ஆவணப்படி 13 முதல் 16 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்தின் பேரில் பல கிரையங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 14, 16 பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரிந்து கொண்டேன். 14, 16 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை பத்தி 23 ல் 13, 15 ம் பிரதிவாதிகள் சொத்தில் பல கிரையங்கள் செய்துள்ளதாக எதிர்வாதம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான், அவர்கள் சொல்லியுள்ள சர்வே எண் 267/2 ல் வேறு கிரையம் எதுவும் ஏற்படவில்லை. மேற்படி விவரம் வில்லங்கம் போட்டு பார்த்து தெரிந்து கொண்டேன். மேற்படி வில்லங்க சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தேவைப்படும் பட்சத்தில் தாக்கல் செய்ய முடியும். 13 முதல் 16 பிரதிவாதிகள் வா.சா.ஆ. 10 ன்படி பெற்ற கிரையமானது தகுந்த மறுபயனுக்காக பெறப்பட்ட கிரையம் என்றால் சரியல்ல. மேற்படி கிரையமானது குடும்ப நலனுக்காக வேண்டி என் தாத்தா, அப்பா மற்றும் சித்தப்பா ஆகியோர்களால் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஆவணமானது எங்கள் குடும்ப நலனுக்காக வேண்டி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது என்பதால் வா.சா.ஆ. 10 கிரைய ஆவணம் என்னையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. உரிய காலத்தில் வா.சா.ஆ.10 ஆவணம் செல்லாது என்று அறிவிக்க உரிய பரிகாரம் கோராமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கானது 13 முதல் 16 பிரதிவாதிகளுக்கு எதிராக நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 10 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை 14, 16 பிரதிவாதிகளும், 13, 15 பிரதிவாதிகளிடம் இருந்து கிரையம் வாங்கியவர்களும் தான் தற்போது அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனக்கு பாகப்பிரிவினை கிடைக்கக்கூடியது என்று நீதிமன்றம் கருதும்பட்சத்திலும் முதன்மை அடிப்படையில் வா.சா.ஆ. 10 ஆவண சொத்தானது 14, 16 பிரதிவாதிக்கு தான் கொடுக்கப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. நானும், என் அப்பா மற்றும் குடும்பத்துடன் சுமூக உறவு முறையில் தான் இருந்து வருகிறேன் என்றும், என் அப்பா தூண்டுதலின் பேரில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

17 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.